கோவை மத்தியசிறை , சிறைகண்காணிப்பாளரின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை :திரு.G.B.செந்தாமரைக்கண்ணன்,பி.இ.,
சிறை கண்காணிப்பாளர்,மத்தியசிறை,கோவை.18

எண். 11298/பொ1/2020 016755 நாள். 27.09.2021

பொருள் : சிறைகள் -மத்தியசிறை,கோவை- தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - தொகுதி IV பணிகள் 2018-19 மற்றும் 2019-2020- ல் நடைபெற்ற தேர்வின் மூலம் திருமதி.கா.சொர்ணலெட்சுமி என்பவர் தற்காலிக இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறைப்படுத்துதல் - குறித்து.

பார்வை :
1) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண். 2454/PSD- 1/ 2020 நாள். 30.5.2020
2) காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்,சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சென்னை குறிப்பாணை எண்.21780/ இஎஸ்1/ 2020- 18 நாள் 24.7.2020
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்11298/ பொ1/2020 நாள் 3.8.2020

(())

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் மற்றும் பார்வை 2-ல் காணும் காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர் குறிப்பாணை மற்றும் பார்வை 3-ல் காணும் ஆணையின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2018-19 மற்றும் 2019-2020 -ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி-4 தேர்வின் மூலம் தற்காலிக இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.கா.சொர்ணலெட்சுமி என்பவர் 3.8.2020 முற்பகல் முதல் இச்சிறையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிக்கு ஆஜராகி பணிபுரிந்து வருகிறார்.

2) இவர் சமர்ப்பித்த சான்றிதழ்கள் அனைத்தும் உண்மைத்தன்மை வாய்ந்தது என சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து அறிக்கைகள் பெறப்பட்டதையடுத்து சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரையில் உள்ள நிலுவை வழக்குகளின் தீர்ப்புக்குட்பட்டு (Subject to outcome of writ petitions pending on the file of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services 2018-2019 , 2019-2020 recruitment) இவரது பணி இளநிலை உதவியாளர் பதவியில் இவர் பணியில் சேர்ந்த 3.8.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இவரை 3.8.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதி காண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

3) இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறுவதுடன் பவானி சாகர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியையும் நிறைவு செய்தல் வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

சிறைகண்காணிப்பாளர்
மத்தியசிறை,கோவை-18

பெறுநர் : திருமதி.கா.சொர்ணலெட்சுமி , இளநிலை உதவியாளர், மத்தியசிறை,கோவை.18

நகல் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்,சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சென்னை 8

நகல் - பொ.2 இருக்கையாளர் (நடப்பு எண்ணில் ) மத்தியசிறை, கோவை. 18(பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு)

நகல்- கண்காணிப்பாளர் ஆணைப்புத்தகம்.

27/9

\\desktop\SHARE FOLDRE\2021 New folder\G1\G1 Proceedings.doc